செய்தி வெளியீடு எண். 31-2019 நாள்: 14.01.2019

# விழுப்புரம் மாவட்டம் வேளாண் பொறியியல் துறையின் மூலம் உயர் தொழில்நுட்ப கரும்பு அறுவடை இயந்திரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் பயனாளிக்கு வழங்கினார்.

*****

விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் வட்டம் சீரப்பனந்தல் ஊராட்சியில், மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலை-I மற்றும் வேளாண் பொறியியல் துறை இணைந்து, உயர் தொழில்நுட்ப கரும்பு அருவடை இயந்திரத்தினை, வாடகை மையம் அமைக்கும் பயனாளிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.01.2019) வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் ஒரு திட்டமான உயர் தொழில்நுட்ப கரும்பு அறுவடை இயந்திரம் வாடகை மையம் திட்டம் (NADP) 2017-18ன் கீழ், சங்கராபுரம் வட்டம் பிரம்மகுண்டம் ஊராட்சியைச் சேர்ந்த பயனாளிக்கு ரூ.1,29,14,516/- மதிப்பீட்டிலான உயர்தொழில்நுட்ப கரும்பு அறுவடை இயந்திரத்தினை ரூ.47,28,190/- மானியத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் இன்றயை தினம் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் (மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலை - I) திருமதி.அனுசுயாதேவி, வேளாண் பொறியியல் துறை விழுப்புரம் செயற்பொறியாளர் திரு.கு.சுதாகர், கள்ளக்குறிச்சி உதவி செயற்பொறியாளர் திரு.குமாரகணேஷ், மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலை-I சேர்மேன் திரு.அரசு மற்றும் வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.